தேதி:-09.03.2021 அசல்வழக்கு எண்.101/2017 வா.சா.1 (ரவி)
குறுக்குவிசாரணை தொடர்ச்சி:- (7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில்)

வா.சா.ஆ.11 சட்டஅறிவிப்பிற்கு நான் தகவல் கொடுக்கவில்லை. அந்த சட்டஅறிவிப்பு தாவாச்சொத்து சம்பந்தமாக மட்டும்தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் மதுரையில்தான் இருந்தேன். அந்த அறிவிப்பை ஒரு அழகர்சாமிதான் அனுப்பினார என்றால் சரிதான். அவர் என் பெரியப்பா சுந்தர்ராஜ் என்பவரின் மகன். அழகர்சாமி இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் இருக்கிறார்கள். ஒரு மனைவியும் ஒரு மகனும் இருக்கிறார்கள். என் பாட்டனார் பெயர் கிருஷ்ணசாமி, பாட்டி பெயர் நாராயணம்மாள். 1936 ல் என் பாட்டனார் கிருஷ்ணசாமிநாயுடு என் பெரியப்பா சங்கிலிநாயுடு பெயரில் பெரியப்பா இளவராக இருக்கும் போது நீதிமன்ற ஏலத்தில் எடுத்த சொத்துதான் தாவாச் சொத்து என்றால் சரிதான். 1936 ல் மேற்படி கிருஷ்ணசாமி மற்றும் பாட்டி நாராயணம்மாள் மற்றும் சங்கிலிநாயுடு பெயர்களில் சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். நன்செய் நிலங்கள்தான் இருந்தது. மூன்று வீடுகளும், மூன்று காலியிடங்கள் இருந்தது. அவ்வாறு எந்த சொத்தும் இருந்ததாக வா.சா.ஆ.11 ல் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 அறிவிப்பு இந்த வழக்கின் 1 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டது. 1 ஆம் பிரதிவாதி ஒரு பதில்அறிவிப்பு கொடுத்தார். பதில்அறிவிப்பில் இந்த தாவாச் சொத்து 1 ஆம் பிரதிவாதியின் தகப்பானருக்கு பாகப்பிரிவினையில் கிடைத்து அவர் இறந்த பிறகு 1 ஆம் பிரதிவாதிக்கும் அவரது தாயாருக்கும் பாத்தியப்பட்டு 1 ஆம் பிரதிவாதியின் தாயார் இறந்த பிறகு 1 ஆம் பிரதிவாதியின் ஏகபோக அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால் எனக்குத் தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.